**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருவிடைமருதூர்**

**மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு**

ROC.No.814/2020/RG/F1, P.Dis. No.36/2021 Dated 07.04.2021

**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 128/2020**

**வழக்கின் சுருக்கம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த காலம் | : | எதிரி 07/09/2020 ம் தேதி காவலுக்குட்படுத்தப்பட்டு, இந்நீதிமன்றத்தில் கு.ப.ம.எண்.1514/2020-ல் 16/09/2020 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார். |
| 2. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 09/12/2020 |
| 3. | குற்றம் குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 06/02/2023 |
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | இல்லை |
| 5. | அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | : | **முதல் விசாரணை** / **குறுக்கு விசாரணை**<br>அ.சா.1 - 22/11/2023 / 22/11/2023<br>அ.சா.2- 22/11/2023 / 22/11/2023<br>அ.சா.3- 22/11/2023 / 22/11/2023<br>அ.சா.4 22/11/2023 / 22/11/2023<br>அ.சா.5 09/02/2024 / 09/02/2024<br>அ.சா.5 29/10/2025 / 29/10/2025 |
| 6. | கு.வி.மு.ச பிரிவு 313(1)ஆ குவிமுச கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 20/02/2026 |

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 16:25:54 +0530

| | | | |
|---|---|---|---|
| 6<br>7. | எதிரிகள் தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டநாள்: | | இல்லை |
| 8. | தலைமறைவுஎதிரிகள்பற்றியவிவரம் | : | இல்லை |
| 9. | மேல்முறையீட்டுநீதிமன்றத்தால்பிறப்பிக்கபட்ட இடைக்காலதடைஉத்தரவுபற்றியவிவரங்கள் | : | இல்லை |

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 16:26:01 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

திருவிடைமருதூர்.(மு.கூ.பொ.)

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருவிடைமருதூர்

முன்னிலை : **திருமதி. P. ரெங்கேஸ்வரி B.Sc., L.L.M.,**

நீதித்துறை நடுவர் எண்.I. கும்பகோணம்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருவிடைமருதூர் (மு.கூ.பொ),

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் வெள்ளிக் கிழமை**

திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம் பங்குனி-13 ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 128/2020**

**(CNR.No. TNTJ 270004752020)**

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சிசி.எண்.128/2020 |
| 2 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | திருநீலக்குடி காவல் நிலையம்<br>குற்ற எண். 940/2020 |
| 3 | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர்<br>திருநீலக்குடி காவல் நிலையம் |
| 4 | எதிரிகளின் விபரம்<br>பெயர்<br>வயது<br>தந்தையின் பெயர்<br>குடியிருப்பு | ஆரோக்கியதாஸ், வயது 36/2020,<br>த/பெ. சாமிதாஸ்,<br>மாதாகோவில் தெரு, 60 சாத்தனூர்.<br>திருவிடைமருதூர் தாலுக்கா. |
| 5 | தேதி நாள்<br>சம்பவம் | 03/09/2020 |
| 6 | முறையீடு | 07/09/2020 |
| 7 | கைது | 07/09/2020 |
| 8 | பிணையில் விடுவித்தல் | எதிரி இந்நீதிமன்றத்தில் கு.ப.ம.எண்.1514/2020-ல் 16/09/2020 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார். |
| 9 | விசாரணை துவக்கம் | 22/11/2023 |
| 10 | விசாரணை முடிவு | 27/02/2026 |

RANGESWARI

Digitally signed by RANGESWARI
Date: 2026.03.27 16:26:09 +0530

| | | |
|---|---|---|
| 11 | தண்டனை அல்லது உத்தரவு | 1. முடிவாக எதிரி இதச பிரிவு 294(பி)-ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து அதற்கு தண்டனையாக 1 வாரம் சாதாரண சிறை தண்டனை வழங்கியும், அபராதம் ரூ.3,000/- விதித்தும் அபாரதம் கட்ட தவறினால் 1 மாதம் சாதாரண சிறை தண்டனை விதித்து குவிமுச பிரிவு 248(2)-ன் கீழ் உத்தரவிட்டும்,<br>2. எதிரி இதச பிரிவு 324-ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து அதற்கு தண்டனையாக 1 வாரம் சாதாரண சிறை தண்டனை வழங்கியும், அபராதம் ரூ.3,000/- விதித்தும் அபாரதம் கட்ட தவறினால் மாதங்கள் சாதாரண சிறை தண்டனை விதித்து குவிமுச பிரிவு 248(2)-ன் கீழ் உத்தரவிட்டும்,<br>3. எதிரி இதச பிரிவு 506(ii)-ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து குவிமுச. பிரிவு 248(1)-ன் கீழ் எதிரியை விடுதலை செய்து உத்தரவிட்டும் தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>29. வழக்கு விசாரணையின் போது எதிரி 07/09/2020-ம் தேதி முதல் 16/09/2020-ம் தேதிவரை 10 நாட்கள் பிணையில் இருந்ததால், கு.வி.மு.ச பிரிவு 428-ன் படியான உத்தரவுகள் ஏதுமில்லை. |
| 12 | தீர்ப்புரை நகலை வழங்குவது அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் மீதான காண் முடிவு | எதிரிக்கு தீர்ப்புரையின் நகல் வழங்கப்பட்டது. |
| 13 | கால தாமததிற்கான விளக்கம் | அரசுத்தரப்பு சாட்சிகளை விசாரிக்க காலதாமதம் |

இவ்வழக்கானது 09/12/2020 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 27/02/2026 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-I **திரு.I.பாண்டியராஜன்**,B.SC.,B.L.,MBA., அவர்கள் முன்னிலையாகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.S.ஜயப்பன்**,B.A.,B.L.,

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 16:26:17 +0530

அவர்களும் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

**2. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

கடந்த 03/09/2020 ம் தேதி இரவு சுமார் 08.30 மணியளவில், 69-சாத்தனூர், மாதாகோவில் தெருவில் பட்டியல் சாட்சி-1 செங்கோல்மேரி என்பவர் அவர் வீட்டு வாசலில் நின்று கொண்டிருக்கும்போது, இவ்வழக்கின் எதிரி ஆரோக்கியதாஸ் என்பவர் முன்விரோதம் காரணமாக பட்டியல் சாட்சி-1 ஐ "குச்சிக்காரி, தேவடியா" என்று காமகுரோதமாக திட்டியும், அருவாளால் வலது உள்ளங்கையிலும், இடது கை கட்டை விரலிலும் வெட்டி சொற்பகாயம் ஏற்படுத்தியும், உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று அருவாளை காண்பித்து கொலை மிரட்டல் விடுத்தும் குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரி மீது பிரிவுகள் 294(பி), 324, 506(ii) இதசவின் கீழ் திருநீலக்குடி காவல் உதவி ஆய்வாளர் குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 207-ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.

**4. குற்றச்சாட்டு:-**

அரசுத்தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள முகாந்திரங்கள் எதிரி குற்றம் புரிந்திருப்பார் என கருதவும், கருத்தில் கொண்டு செயலாற்றவும் வழிவகுப்பனவாக தெரிந்தமையால்,

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 16:26:25 +0530

எதிரி மீது பிரிவுகள் 294(பி), 324, 506(ii) இதசவின் கீழ் குற்றச்சாட்டு வனைந்து எதிரிக்கு படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்து தான் குற்றவாளி இல்லை என்று கூறினார். எனவே வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

5. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் 1 முதல் 8 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

**6. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்**:-

வழக்கு சம்பவம் குறித்து கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அ.சா.1 செங்கோல்மேரி என்பவரிடம் கடந்த 07/09/2020 ம் தேதி பட்டியல் சாட்சி-8 தலைமை காவலர் குமார் என்பவர் வாக்குமூலம் பெற்று, நிலையம் ஆஜராகி திருநீலக்குடி காவல் நிலைய மனு எண்.193/2020 ஐ வழங்கி, விசாரணைக்கு பிறகு கடந்த 07/09/2020 ம் தேதி காலை 09.00 மணிக்கு காவல் நிலைய குற்ற எண்.940/2020-ல் சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 506(ii) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். பின்னர் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக அ.சா.6 காவல் உதவி ஆய்வாளர் ராஜேஷ்கண்ணன் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார். மேற்படி வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே காலை 10.00 மணிக்கு சம்பவயிடம் சென்று அ.சா.4 ராஜ்குமார், மற்றும் பட்டியல் சாட்சி- 4 மரியதாஸ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகஜர்

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 16:26:32 +0530

மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக அ.சா.2 அருள்தாஸ் மற்றும் அ.சா.3 சர்மிளா ஆகியோர் விசாரிக்கப்பட்டுள்ளனர். பின்னர் சாட்சிகளை விசாரணை செய்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால் எதிரியை தேடி வந்த நிலையில், அன்றைய தினமே பகல் 12.30 மணியளவில் எதிரியின் வீட்டு முன்பு நின்றுகொண்டிருந்த எதிரி ஆரோக்கியதாஸ் என்பவரை அடையாளம் கண்டு காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து பாரா காவல் வசம் ஒப்படைத்து உரிய நடைமுறைக்கு பின் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். அ.சா.1க்கு சிகிச்சை அளித்த அ.சா.5 மருத்துவர் முகைதீன் அப்துல்காதர் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து மேற்படி அ.சா.1க்கான காயச்சான்று பெற்று வந்துள்ளார். பின்னர் வழக்கின் புலன்விசாரணை முடித்து வழக்கின் கோப்பினை பார்வையிட்டு எதிரிக்கு எதிராக 07/09/2020ம் தேதி சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 506(ii) இதசவின் படி குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

7. இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

8. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய்சாட்சியம் என்றார் எதிரி தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.

**9. விவாதம்:-**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் குற்றச்சாட்டு மெய்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தகுந்த தண்டனை அளிக்க

RANGESWARI
Digitally signed by RANGESWARI
Date: 2026.03.27 16:26:39 +0530

வேண்டுமென்று வாதிட்டார்.

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரி மீதான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

10. **தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:-**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரி மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் எந்த விதமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

## தீர்வு

11. இருதரப்பும் கேட்கப்பட்டது. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களும், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

12. அரசு தரப்பில் கடந்த 03/09/2020 ம் தேதி இரவு சுமார் 08.30 மணியளவில், 69-சாத்தனூர், மாதாகோவில் தெருவில் அ.சா.1 செங்கோல்மேரி என்பவர் அவர் வீட்டு வாசலில் நின்று கொண்டிருக்கும்போது, இவ்வழக்கின் எதிரி அசிங்கமாக திட்டியதாகவும், அருவாளால் வலது உள்ளங்கையிலும், இடது கை கட்டை விரலிலும் வெட்டி சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும், உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று அருவாளை காண்பித்து கொலை மிரட்டல் விடுத்ததாகவும் எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

13. வழக்கு சம்பவம் குறித்து கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில்

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 16:26:48 +0530

இருந்த அ.சா.1 செங்கோல்மேரி என்பவரிடம் கடந்த 07/09/2020 ம் தேதி பட்டியல் சாட்சி-8 தலைமை காவலர் குமார் என்பவர் வாக்குமூலம் பெற்று, நிலையம் ஆஜராகி திருநீலக்குடி காவல் நிலைய மனு எண்.193/2020 ஐ வழங்கி விசாரணைக்கு பிறகு கடந்த 07/09/2020 ம் தேதி காலை 09.00 மணிக்கு காவல் நிலைய குற்ற எண்.940/2020-ல் சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 506(ii) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

14. வழக்கு சம்பவம் குறித்து புகார் வாக்குமூலம் அளித்துள்ள செங்கோல்மேரி அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், எதிரி ஆரோக்கியதாஸை தனக்கு தெரியும் என்றும், சுமார் 2 வருடங்களுக்கு முன்பு இரவு சுமார் 09.00 மணியளவில் தான் தனது வீட்டு வாசலில் இருந்தபோது ஆரோக்கியதாஸ் தன் வீட்டு வாசலில் நின்று பேசிக்கொண்டிருந்தார் என்றும், அப்போது நாய் குரைத்தது தான் நாயை விரட்டிவிட்டதாகவும், அப்போது எதிரி "தேவடியா, குச்சிக்காரி" என்று வித்தியாசமான வார்த்தைகளால் அசிங்கமாக திட்டினார் என்றும், அதன் பிறகு எதிரி கத்தியை வைத்துக்கொண்டு வெட்டிவிடுவேன் என்று கூறி ஓங்கி வெட்ட வந்தார் என்றும், தான் தடுத்தபோது தனது வலது மற்றும் இடது கை கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் இடையே கத்திப்பட்டு காயம் ஏற்பட்டது என்றும், அதன்பிறகு தான் தனக்கு ஏற்பட்ட காயத்திற்காக கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றதாகவும், தான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் வந்து தன்னை விசாரித்தார்கள் என்றும், புகார்வாக்குமூலத்தில் உள்ள கைரேகை தான் வைத்ததுதான் என்றும், அந்த புகார் வாக்குமூலம் தான் கொடுத்தது தான் என்றும், போலிசார் தன்னை

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 16:26:54 +0530

விசாரனை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

15. வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.2 அருள்தாஸ் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், அ.சா.1 தனது மனைவி என்றும், எதிரி ஆரோக்கியதாஸை தனக்கு தெரியும் என்றும், கடந்த 2020 ஜுன் மாதம் தேதி சரியாக ஞாபகமில்லை என்றும், இரவு சுமார் 08.30 மணியளவில் வீட்டில் உடல் நிலை சரியில்லாமல் படுத்திருந்ததாகவும், தன் வீட்டு வாசலில் சத்தம் கேட்டது என்றும், தான் வெளியில் வந்து பார்த்தபோது ஆரோக்கியதாஸ் கத்தியை வைத்துக்கொண்டு அ.சா.1 ஐ வெட்ட வந்தார் என்றும், அப்போது தனது மனைவி கத்தியை பிடித்ததால் அவரது வலது மற்றும் இடது கை கட்டை விரலுக்கும், ஆள்காட்டி விரலுக்கும் இடையே கத்திப்பட்டு காயம் ஏற்பட்டது என்றும், பிறகு உன் குடும்பத்தையே காலி செய்வேன் என்று மிரட்டினார் என்றும், அதன்பிறகு தனது மருமகள் சர்மிளா காயம் பட்ட தனது மனைவியை ஒரு போக்கு ஆட்டோ மூலமாக கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார் என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

16. வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற மற்றொரு சாட்சியாக அ.சா.3 சர்மிளா விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், அ.சா.1 மற்றும் அ.சா.2 தனது மாமியார் மற்றும் மாமனார் ஆவார்கள் என்றும், எதிரி ஆரோக்கியதாஸை தனக்கு தெரியும் என்றும், சுமார் 2 வருடங்களுக்கு முன்பு 3 ம் தேதி இரவு சுமார் 08.30 மணியளவில் வீட்டில் சமைத்து கொண்டிருந்ததாகவும், தன் வீட்டு வாசலில் சத்தம் கேட்டது என்றும், தான் வெளியில் வந்து பார்த்தபோது ஆரோக்கியதாஸ் "தேவடியா, குச்சிக்காரி" என்று திட்டிகொண்டிருந்தார்

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 16:27:01 +0530

என்றும், பிறகு கத்தியை வைத்துக்கொண்டு அ.சா.1 ஐ கழுத்தில் வெட்ட வந்தபோது, அ.சா.1 தடுத்ததால் அவரது வலது மற்றும் இடது கையில் கத்திப்பட்டு காயம் ஏற்பட்டது என்றும், அதன்பிறகு தனது ஊர்காரர்கள் வந்து அவரை இழுத்து சென்று விட்டார்கள் என்றும், அதன்பிறகு தான் காயம் பட்ட தனது மாமியாரை ஒரு போக்கு ஆட்டோ மூலமாக கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றதாகவும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

17. பார்வை மகசர் சாட்சியாக அ.சா.4 ராஜ்குமார் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ தனக்கு தெரியும் என்றும், சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் வேலைக்கு சென்றுவிட்டு இரவு சுமார் 11.30 மணியளவில் வீட்டிற்கு வந்து தூங்கி விட்டதாகவும், மறுநாள் காலை சுமார் 10.00 மணியளவில் செங்கோல் மேரி வீட்டை தாண்டியுள்ள மளிகை கடைக்கு செல்வதற்காக சென்று கொண்டிருந்ததாகவும், அப்போது செங்கோல்மேரி வீட்டு வாசலில் போலிசார் அந்த இடத்தை பார்வையிட்டு யார் யாருடைய வீடு பக்கத்தில் உள்ளது என்று படம் வரைந்தார்கள் என்றும், அதற்காக தன்னிடம் கையொப்பபம் பெற்றுக்கொண்டார்கள் என்றும், பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார். பார்வை மகசரில் உள்ள அ.சா.4 ன் சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

18. அ.சா.5 முகைதீன் அப்துல்காதல், தனது சாட்சியத்தில், தான் தற்போது கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் முதுநிலை மருத்துவராக பணியாற்றி வருவதாகவும், கடந்த 03.09.2020-ம் தேதி கும்பகோணம் அரசு மருத்துவமனையில் அவசர

சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது அன்றைய தினம் இரவு 10.00 மணியளவில் சுமார் 65 வயது மதிக்கதக்க சாத்தனூர் கிராமத்தை சேர்ந்த அருள்தாஸ் மனைவி செங்கோல்மேரி என்பவரை அவரது உறவினர் சர்மிளா என்பவர் சிகிச்சைக்கு அழைத்து வந்திருந்தார் என்றும், தான் அவரை விசாரித்தபோது அன்றை தினம் இரவு 09.00 மணியளவில் அவரது வீட்டில் தெரிந்த ஒரு நபர் கத்தியால் தாக்கியதாக கூறினார் என்றும், தான் அவரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார் என்றும், அவரது வலது கையில் ஒரு சிதைந்த காயம் இருந்தது என்றும், அவருக்கு முதல் உதவி செய்து உள்நோயாளியாக அனுமதித்ததாகவும், பின்னர் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என கருத்துரை வழங்கி காயச்சான்று வழக்கியதாகவும், மேற்படி காயங்கள் மேற்சொன்ன விதத்தில் தாக்கியிருந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

19. அ.சா. 6 ராஜேஷ்கண்ணன், காவல் உதவி ஆய்வாளர், தான் தமிழ்நாடு சிலை கடத்தல் தடுப்பு பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் குமார் 1151 தற்போது பணியிலிருந்து எங்கு சென்றார் என்று தெரியாத காரணத்தினாலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி தான் என்பதாலும் அவருக்காகவும் சாட்சியம் அளிப்பதாகவும், தான் கடந்த 07.09.2020 ம் தேதி திருநீலக்குடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 2020 ம் ஆண்டு தலைமை காவலர் குமார் 1151 நிலைய பொறுப்பில் இருந்தபோது கும்பகோணம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அ.சா.1 செங்கோல்மேரி என்பவரை

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 16:27:16 +0530

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் ஆஜராகி திருநீலக்குடி காவல் நிலைய மனு எண்.193/2020 ஐ வழங்கி விசாரணைக்கு பிறகு கடந்த 07.09.2020 ம் தேதி காலை 09.00 மணிக்கு காவல் நிலைய குற்ற எண். 940/2020 ல் சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 506(ii) இதச-வின் கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்தார். என்றும், பின்னர் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக தனது பார்வைக்கு வைத்தார் என்றும், மேற்படி வழக்கினை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே காலை 10.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் மரியதாஸ் மற்றும் ராஜ்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் பட்டியல் சாட்சிகள் செங்கோல்மேரி, அருள்தாஸ், சர்மிளா ஆகியோர்களை கும்பகோணம் அரசு மருத்துவமனையில் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், சாட்சிகளை விசாரித்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால் வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் அன்றைய தினமே பகல் 12.30 மணியளவில் எதிரியின் வீட்டின் முன்பு நின்றுகொண்டிருந்த எதிரி ஆரோக்கியதாஸ் என்பவரை அடையாளம் கண்டு காரணம் கூறி கைது செய்து, நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து பாரா காவல் வசம் ஒப்படைத்து உரிய நடைமுறைக்குப்பின் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததாகவும், 24.09.2020 ம் தேதி கும்பகோணம் அரசு மருத்துவமனை சென்று அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் முகைதீன்அப்துல் காதர் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து மேற்படி அ.சா.1 க்கான காயச்சான்று பெற்று வந்ததாகவும், பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து வழக்கின் கோப்பினை பார்வையிட்டு

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 16:27:23 +0530

ஆஜர் எதிரிக்கு எதிராக 07.09.2020 ம் தேதி சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 506(ii) இதச-வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

20. வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 செங்கோல்மேரி திருநீலக்குடி காவல் நிலையத்தில் புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார். மேற்படி புகார் வாக்குமூலத்தை பரிசீலனை செய்ததில், கடந்த 03/09/2020 ம் தேதி இரவு சுமார் 08.30 மணியளவில் அ.சா.1 ன் வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்ததாகவும், அப்போது முன்விரோதம் காரணமாக அ.சா.1 ன் தெருவைச் சேர்ந்த ஆரோக்கியதாஸ் குடிபோதையில் அ.சா.1 ன் வீட்டு வாசலில் நின்று திட்டிக்கொண்டிருந்ததாகவும், அ.சா.1 ஏன் தங்கள் வீட்டு வாசலில் நின்று திட்டுகிறாய் என்று கேட்டதற்கு, "ஏண்டி குச்சிகாரி தேவடியா நான் திட்டினா உனக்கு என்னடி உன்னதாண்டி திட்டுறேன்" என்று அவர் கையில் வைத்திருந்த அரிவாளால் தன்னை வெட்ட வந்ததாகவும், அ.சா.1 அதை தடுத்தபோது அ.சா.1 ன் வலது உள்ளங்கையிலும், இடது கை கட்டைவிரலிலும் காயம் ஏற்பட்டு இரத்தம் வந்தது என்றும், தான் சத்தம் போடவே அ.சா.1 ன் மருமகள் சர்மிளா வீட்டில் இருந்து ஓடி வரவும் மேற்படி ஆரோக்கியதாஸ் அங்கிருந்து போகும்போது இன்னைக்கு தப்பிச்சிக்கிட்ட என்னைக்கா இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விட்டு அங்கிருந்து சென்று விட்டார் என்றும், பிறகு அ.சா.1 ன் மருமகள் ஒரு போக்கு ஆட்டோ மூலம் அ.சா.1 ஐ கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்கு சேர்த்தார் என்று புகார் வாக்குமூலம் அளித்துள்ளார் என்பது தெரிய வருகிறது.

21. அரசு தரப்பில் எதிரி அ.சா.1 செங்கோல்மேரி என்பவரை பொது இடத்தில் வைத்து அசிங்கமாக திட்டியதாக எதிரி மீது இதச பிரிவு 294(பி)-ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 16:27:30 +0530

அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தை பரிசீலனை செய்ததில், எதிரி அ.சா.1 ஐ பார்த்து அசிங்கமாக திட்டியதாக குறிப்பிட்டு புகார் வாக்குமூலம் அளிக்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.3 சர்மிளா, எதிரி அ.சா.1 ஐ பொதுயிடத்தில் வைத்து அசிங்கமாக திட்டியதாக சாட்சியமளித்துள்ளார். எனவே அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 294(பி),ன் படியான குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரி இதச பிரிவு 294(பி),ன் கீழ் குற்றவாளி என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

22. வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அ.சா.1 மற்றும் வழக்குசம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 அருள்தாஸ் மற்றும் அ.சா.3 சர்மிளா ஆகியோர் விசாரிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தங்களது சாட்சியத்தில், எதிரி கத்தியை வைத்துக் கொண்டு அ.சா.1 ஐ கழுத்தில் வெட்ட வந்த போது அ.சா.1 தடுத்ததால் அவரது வலது மற்றும் இடது கையில் கத்திப்பட்டு காயம் ஏற்பட்டது என்று சாட்சியமளித்துள்ளனர். எனவே அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவு 324-ன் படியான குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரி இதச பிரிவு 324-ன் கீழ் குற்றவாளி என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

23. பார்வை மகசர் சாட்சியாக அ.சா.4 ராஜ்குமார் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், செங்கோல்மேரி வீட்டு வாசலில் போலிசார் அந்த இடத்தை பார்வையிட்டு யார் யாருடைய வீடு பக்கத்தில் உள்ளது என்று படம் வரைந்தார்கள் என்றும், அதற்காக

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 16:27:37 +0530

தன்னிடம் கையொப்பபம் பெற்றுக்கொண்டார்கள் என்றும், பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

24. அ.சா.5 மருத்துவர் முகைதீன்அப்துல்காதர் அ.சா.1க்கு கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்து காயச்சான்று வழங்கியுள்ளார். அ.சா.5 மருத்துவர் தனது சாட்சியத்தில் அ.சா.1க்கு வலது கையில் ஒரு சிதைந்த காயம் இருந்ததாக சாட்சியமளித்துள்ளார். காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி காயச்சான்றில் அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என கருத்துரை வழங்கப்பட்டுள்ளது.

25. அரசு தரப்பில் எதிரி ஆரோக்கியதாஸ் அ.சா.1ஐ பார்த்து அரிவாளை காட்டி உன்னை என்னைக்கிருந்தாலும் கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாக இதச பிரிவு 506(ii)-ன் கீழ் எதிரியின் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தை பரிசீலனை செய்ததில், எதிரி அங்கிருந்து போகும்போது இன்னைக்கு தப்பிச்சிக்கிட்ட என்னைக்கா இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விட்டு அங்கிருந்து சென்று விட்டார் என்று குறிப்பிட்டு புகார் வாக்குமூலம் அளிக்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. ஆனால் அ.சா.1 தனது சாட்சியத்தில், எதிரி மிரட்டல் விட்டதாக சாட்சியமளிக்கவில்லை. வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 எதிரி உன் குடும்பத்தையே காலி செய்வேன் என்று மிரட்டியதாக சாட்சியமளித்துள்ளார். வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 16:27:43 +0530

மற்றொரு சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.3 எதிரி அ.சா.1 ஐ பார்த்து கொலை மிரட்டல் விடுத்ததாக சாட்சியமளிக்கவில்லை.

மேலும் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம், *Noble Mohandass -vs- State, dated 29.12.1988* என்ற வழக்கில்,

*"Further for being an offence under section 506(ii) which is rather an important offence punishable with imprisonment which may extend to seven years, the threat should be a real one and not just a mere word when the person uttering it does exactly mean what he says and also when the person at whom threat is launched does not feel threatened actually. In fact P.W.1 when she filed the complaint to the police officer, did not express any fear for her life nor asked for any protection. Therefore, the offence under section 506(ii) is not made out"*

என்று அப்பிரிவில் கூறப்பட்டுள்ள மிரட்டல் என்பது உண்மையானதாக இருக்கவேண்டும் என்றும் வெறும் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்ற வார்த்தையை மட்டும் வைத்துக் கொண்டு மேற்படி பிரிவின் கீழான குற்றம் செய்யப்பட்டுள்ளதாக எடுத்துக் கொள்ள முடியாது என்றும் கூறியுள்ளது இவ்வழக்கிற்கு பொருந்துவதாக உள்ளது. மேலும் இவ்வழக்கிலும் அ.சா.1 அளித்த புகார் வாக்குமூலத்தில் தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றோ, அதனால் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றோ குறிப்பிடவில்லை. எனவே எதிரி மீதான இ.த.ச பிரிவு 506(ii )-ன் படியான குற்றச்சாட்டிற்கு உறுதியூட்டும் சாட்சியங்கள் மூலம் அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

26. வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அ.சா.1 மற்றும் வழக்குசம்பவத்தை கண்ணுற்ற

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 16:27:50 +0530

சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில், எதிரி அ.சா.1 ஐ பொது இடத்தில் அசிங்கமாக திட்டியதாகவும், எதிரி கத்தியை வைத்துக் கொண்டு அ.சா.1 ஐ கழுத்தில் வெட்ட வந்தபோது அ.சா.1 தடுத்ததால், அவரது வலது மற்றும் இடது கையில் கத்திப்பட்டு காயம் ஏற்பட்டதாகவும் தெளிவாக சாட்சியமளித்துள்ளார்கள். அ.சா.5 மருத்துவர் தனது சாட்சியத்தில் அ.சா.1 க்கு வலது கையில் ஒரு சிதைந்த காயம் இருந்ததாக சாட்சியமளித்துள்ளார். மருத்துவரின் சாட்சியமும் அ.சா.1-ன் சாட்சியத்தை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது. வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்கள் அ.சா.1 ஐ அனுசரித்து சாட்சியமளித்துள்ளனர். மேலும் அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்களின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கிற்கு மேலும் வலு சேர்ப்பதாக அமைந்துள்ளது.

27. எனவே அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 294(பி), 324-ன் படியான குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரி இதச பிரிவுகள் 294(பி), 324-ன் கீழ் குற்றவாளி என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**28. தண்டனை குறித்த கேள்வி**:

அம்மா மன்னித்து குறைந்தபட்ச தண்டனை வழங்க வேண்டி கூறினார். இருந்தபோதிலும் குற்றத்தின் தன்மையை கருத்தில் கொண்டு எதிரிக்கு உரிய தண்டனை வழங்க வேண்டியது அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 16:27:57 +0530

**1. முடிவாக எதிரி இதச பிரிவு 294(பி)-ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து அதற்கு தண்டனையாக 1வாரம் சாதாரண சிறை தண்டனை வழங்கியும், அபராதம் ரூ.3,000/- விதித்தும் அபாரதம் கட்ட தவறினால் 1 மாதம் சாதாரண சிறை தண்டனை விதித்து குவிமுச பிரிவு 248(2)-ன் கீழ் உத்தரவிட்டும்,**

**2. எதிரி இதச பிரிவு 324-ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து அதற்கு தண்டனையாக 1 வாரம் சாதாரண சிறை தண்டனை வழங்கியும், அபராதம் ரூ.3,000/- விதித்தும் அபாரதம் கட்ட தவறினால் மாதங்கள் சாதாரண சிறை தண்டனை விதித்து குவிமுச பிரிவு 248(2)-ன் கீழ் உத்தரவிட்டும்,**

**3. எதிரி இதச பிரிவு 506(ii)-ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து குவிமுச. பிரிவு 248(1)-ன் கீழ் எதிரியை விடுதலை செய்து உத்தரவிட்டும் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**29. வழக்கு விசாரணையின் போது எதிரி 07/09/2020-ம் தேதி முதல் 16/09/2020-ம் தேதிவரை 10 நாட்கள் பிணையில் இருந்ததால், கு.வி.மு.ச பிரிவு 428-ன் படியான உத்தரவுகள் ஏதுமில்லை.**

30. வழக்கு சொத்துக்கள் ஏதும் இல்லை. எதிரி எழுதிக்கொடுத்துள்ள பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம்

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 16:28:04 +0530

செய்யப்பட்டு, இன்று 27/03/2026-ம் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 16:28:12 +0530

மாவட்டஉரிமையியல்மற்றும்நீதித்துறைநடுவர்,

திருவிடைமருதூர்.(மு.கூ.பொ.)

**அரசுத்தரப்பு சாட்சிகள்;**

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி. செங்கோல்மேரி (புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு. அருள்தாஸ் (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.3 | திருமதி. சர்மிளா, (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.4 | திரு. ராஜ்குமார் (பார்வை மகசர் சாட்சி) |
| அ.சா.5 | திரு.முகைதீன் அப்துல்காதர் (மருத்துவர்) |
| அ.சா.6 | திரு.ராஜேஸ்கண்ணன் (காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்;**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 07/09/2020 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | 07/09/2020 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.3 | 07/09/2020 | காயச்சான்று |
| அ.சா.ஆ.4 | 07/09/2020 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 07/09/2020 | மாதிரி வரைபடம் |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்;** இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்;** இல்லை

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.27 16:28:19 +0530

**<u>குறிப்பு:</u>**

1. எதிரி 07/09/2020 ம் தேதி காவலுக்குட்படுத்தப்பட்டு, இந்நீதிமன்றத்தில் கு.ப.ம.எண்.1514/2020-ல் 16/09/2020 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார்.

2. சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. இவ்வழக்கின் தீர்ப்பு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் வழக்கு சொத்து இல்லை.

5. வழக்கின் தீர்ப்பு நகல் மாண்பமை தலைமை நீதித்துறை நடுவர் தஞ்சாவூர் (இருப்பு) கும்பகோணம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

RANGESWARI

Digitally signed by RANGESWARI
Date: 2026.03.27 16:28:27 +0530

மாவட்டஉரிமையியல்மற்றும்நீதித்துறைநடுவர்,

திருவிடைமருதூர்.(மு.கூ.பொ.)